DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No. - 12/2022

Prosecution PW - 9

| | | | |
|---|---|---|---|
| Name | Kamaraj | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 23.06.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 produced on PT warrant A2-present. Accused A2,A4,A5absent.

முதல் விசாரணை

நான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது திருச்சியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 01.12.2019 ஆம்தேதி நாகப்பட்டினம் போதை பொருள் பொறுப்பு காவல் துணை கண்காணிப்பாளராக பணியில் இருந்தபோது ஆய்வாளர் சாந்தகுமார் என்பவர் கு.எண். 58/2019, ச.பிரிவு 8(c), 20(b)(ii)(C),29(1),25 of NDPS Act ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் விசாரணை செய்து மேல் விசாரணைக்காக என் பார்வைக்கு வைத்ததை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 02.12.2019 ஆம்தேதி சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் முவேந்தம், சீனிவாசன் ஆகியோர் சம்பவ இடத்தை அடையாளம் காட்ட சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும், மாதரிவரைப்படம் தயார் செய்தேன். பார்கை மகசர் ஏற்கனவே அ.த.சா.ஆ. 9 ஆக குறியிடு செய்யப்பட்டது. மாதிரி வரைப்படம் அ.தா.சா.12. பினனர் சாட்சிகள் அருண்பிரசாத், மணிகண்டன், ராஜகோபால், கனகசுந்தரம், சுவாமிநாதன், முருகானந்தம், மற்றும் அண்ணா கந்தசாமி, ராஜகுமாரன், பூமான், வெங்கடேசன் உதயகுமார், பாண்டிதுரை, ராஜசேகரன், மணிகண்டன். செல்வகணபதி, பாலசுப்ரமணியன், கணேஷ்குமார், சீனிவாசன், மூவேந்தன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் தலைமறைவு எதிரி பால்பாண்டி மற்றும் கார்த்திக் ஆகியோர்களை தேடி வந்தேன். 16.12.2019 ஆம்தேதி இவ்வழக்கின் எதிரி பால்பாண்டி கோவை நீதித்துறை நடுவர் எண்.5 ல் சரணடைந்ததவரை இந்நீதிமன்ற உத்தரவு பெற்று போலிஸ் காவலில் எடுத்து சாட்சிகள் பாக்யராஜ் கிராம நிர்வாக அலுவலர், திரு.செல்வ மணி கிராம உதவி ஆய்வாளர் ஆகியோர் முன்னிலையில் நாகப்பட்டினம் NIBCID அலுவலகத்தில விசாரித்தபோது எதிரி தாமாக முன்வந்து கொடுத்து ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகளின் முன்னிலையில் பதிவு செய்தேன். 18.12.2019 ஆம் தேதி ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்த பின்னர் எதிரி பால்பாண்டியை நீதிமன்ற காவலுக்குஉட்படுத்தினேன். 21.01.2020 ஆம்தேதி இவ்வழக்கின் எதிரி கார்த்திக் என்பவரை நாகூர் கடைவீதியில் 18.30 மணிக்கு

கைது செய்து சாட்சிகள் சீனவாசன், முவேந்தன் முன்னிலையில் எதிரி கார்த்திக் கொடுத்து ஒப்புதல வாக்குமூலத்தை பதிவு செய்தேன். 22.01.2020 ஆம் தேதி எதிரி கார்த்திக்கை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 04.03.2020 ஆம் தேதி இவ்வழக்கின் ரசாயன பகுப்பாய்வு அறிக்கை வழங்கிய மருத்துவர் சிவகுமார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கஞ்சா பயன்படுத்துவதால் ஏற்படும் பின் விளைவுகளை குறித்து மருத்துவர் உதயபானு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து அவர்கள் வழங்கிய அறிக்கை அ**.**தா**.**சா**.**ஆ**.13.** பின்னர் 05.03.2020 இவ்வழக்கின் ஆய்வாளர் சாந்தகுமாரியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, இவ்வழக்கின் தலைமறைவு எதிரிகள் முருகன், சக்திபாபு ஆகியோர்களை தேடி வந்த நிலையில் நாகப்பட்டின NIBCID அலுவலக காவல் துணை கண்காணிப்பாளராக பரத்சீனிவாசன் பொறுப்பேற்றதும், வழக்கு கோப்பினை அவரது பார்வைக்கு வைத்தேன்.

<u>குறுக்கு விசாரணை எதிரி தரப்பில்</u>

முதல் தகவல் அறிக்கையில் எதிரிகளாக சரவணன், அறிவேந்திரன், செந்தில் குமார் ஆகியோர் மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் , தலைமறைவு எதிரியாக பால்பாண்டி பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. பால்பாண்டி, கார்த்திக் ஆகியோரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்கு முன்பு அது உங்களுக்கு எதிராக பயன்படுத்தக்கூடும் என்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். ஆனால் எழுத்துமூலமாக பதிவு செய்யவில்லை. அவருக்கு யோசனை செய்யவும், வழக்கறிஞர் வைத்துக்கொள்ள உரிமை உள்ளது என்றும் சொல்லியுள்ளேன் ஆவணமாக பதிவு செய்யவில்லை. பதிவு செய்யாததற்கு காரணம் எதுவும் இல்லை. மூவேந்தனும், சீனிவாசனும், 1,5 எதிரிகளை கைது செய்யும்போது அவர்கள் உடன் இல்லை. மூவேந்தனும், சீனிவாசனையும் சம்பவ இடத்திற்கு சம்மதத்ின் அடிப்படையில் அழைத்து சென்றேன். வழக்கின் தடய சொத்து 03.01.2020 ஆம்தேதிதான் பகுப்பாய்விற்கு உட்பட்டது என்றால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் எங்கு யார் வசம் இருந்தது என்பதற்கு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. கியூ பிரான்ச் ஆய்வாளர் வழக்கு கோப்பை எங்கள் அலுவலகத்தில் ஒப்படைத்த பிறகு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட எந்த ஆவணத்திலும் கையெழுத்து போடவில்லை என்றால் கைது அறிவிப்பில் கையொப்பம் செய்துள்ளார்கள். கஞ்சா பயன்படுத்தியதா, பாதிப்பு ஏற்படுத்தியதாக பொதுமக்கள் புகார் கொடுத்ததாக எங்கள காவல் நிலையத்திற்கு எந்த தகவலும் வரவில்லை. அ.தா.சா.13 அறிக்கை வழக்கிற்கு தேவையில்லாததது என்றால் சரியல்ல. இந்த வழக்கை சட்டவிதிக்குட்பட்டு நான் விசாரணை செய்யவில்லை என்றும் சக காவல் அதிகாரிகள் வேண்டுகோளுக்காகவும், புள்ளி விவர கணக்கிற்காகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு

என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒப்பம்/-ஜி. சுந்தரராஜன், B.Sc., B.L.,)

அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்